**அ.வ.எண். 93/2024**
**பி.வா.சா.2 : ராமகிருஷ்ணன்**
**தேதி : 10.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எனக்கு 2 சகோதரிகள். ஒருவர் திருமணமாகமலேயே சிறுவயதில் இறந்துவிட்டார். மற்றொரு சகோதரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனது பிறந்த தேதி 24.05.1984. சர்வே எண்.424/7 கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லும் காலத்தில் வாதி இளவராக இருந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. எங்கள் குடும்பத்திற்கு எங்கள் தகப்பனார் தான் தலைவர். அந்த காலகட்டத்தில் உங்கள் அப்பா தான் குடும்ப தலைவராக இருந்து குடும்ப பொறுப்புகளை செய்து வந்தார் என்றால் சரிதான். 1976 ஆண்டில் நீங்கள் பிறக்காததால் அந்த சமயத்தில் என்ன நடந்தது என்று உங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். உங்கள் தந்தை 1976 ல் வாங்கிய கிரையம் 4 ஏக்கர் 47 செண்ட் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன 4 ஏக்கர் 47 செண்ட்டிற்கும் நான்கெல்லை கண்டு தான் கிரையம் வாங்கியுள்ளார். உங்கள் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளபடி 20.04.1976 ஆம் தேதியில் சர்வே எண்.424/1பி-ல் கட்டுப்பட்ட சொத்தை தான் கிரையம் வாங்கியதாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். நீங்களும், உங்கள் தகப்பனாரும் 2003 ஆம் ஆண்டில் கிரையம் செய்து கொடுத்தது 4 ஏக்கர் 72 செண்ட் என்றால் சரிதான் அந்த கிரையம் வாங்கியர் என் சொந்த பெரியப்பா மகன் அவர் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்து மட்டும் செய்தேன். மேற்படி கிரைய பத்திரத்தில் உங்கள் தகப்பனார் பெயரில் கிரையம் ஏற்பட்டிருந்தாலும் நீங்களும் உங்கள் தகப்பனாரும் கூட்டாக அனுபவித்து

வருவதாகவும் எங்களது குடும்ப தேவைக்காகவும், குடும்ப கடன்களை தீர்ப்பதற்காகவும் கிரையம் செய்து கொடுக்கிறோம் என்று வாசகம் கண்டுள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.20 ஆவணத்தில் சர்வே எண்.424/7–ல் ராணா பழனியப்பன் மற்றும் 5 பேர் என்று உங்கள் பொதுக்குடும்பத்தை சேர்ந்தவர்கள் பெயர்கள் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான் அது யூடிஆரில் தப்பாக உள்ளது அதை என் தகப்பனார் 1991–ல் மனு கொடுத்து சரிசெய்துள்ளார். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.22 ஆக தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.21 ஆவணத்திலும் அனைவரது பெயரிலும் கூட்டாக உள்ளது என்று சொன்னால் அது தவறாக உள்ளது மேலும் அதனை திருத்தம் செய்யப்பட்டு என் தகப்பனார் பெயர் மட்டும் உள்ளது. 1991–ல் வாதிக்கு திருமணம் ஆகவில்லை ஆனால் அவர் இளவராக இருந்தார். பட்டா மாறுதலுக்கு யார் யார் எப்போது விசாரணை செய்யப்பட்டது என்றால் தெரியாது. உங்கள் தகப்பனார் 4 ஏக்கர் 47 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றும் ஆனால் 4 ஏக்கர் 72 செண்ட்டிற்கு பட்டா மாறுதல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல 2003 ல் தவறுதலாக கிரையம் செய்ததால் தான் உங்கள் தகப்பனாரின் உடன்பிறந்தவர்கள் பாகம் கேட்டு பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த சொத்திற்கு அருகில் எங்களுக்கு பூர்வீக சொத்து இல்லை. நீங்கள் 2003 ல் கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தில் சர்வே எண்.424–ல் உங்களுக்கு இதர நிலங்கள் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதிக்கு பங்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக பூர்வீக சொத்தை விற்றுவிட்டு உங்கள் அப்பா சம்பாதித்த சொத்துக்களில் வாங்கியதாக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பதிவாளர் அலுவலகத்தில் 2003 ல் உங்கள் தகப்பனாரும் நீங்களும் சேர்ந்து சொத்தை விற்கும் போது சார்பதிவாளர் உங்களிடமும், உங்கள் தகப்பனாரிடமும்

பத்திரங்கள் சம்மந்தப்பட்ட விவரங்களை கேட்டு தெரிநதுகொண்டு கிரையம் செய்தார் என்று சொன்னால் என்னிடம் கேட்கவில்லை என் தகப்பனாரிடம் கேட்டு கிரையம் செய்யப்பட்டது நானும் உடன் இருந்தேன். வீட்டு வரி ரசீதுகள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றும் அதன் அடிப்படையில் உங்களுக்கு சார்பாக தீர்ப்பாகாது என்று சொன்னால் சரியல்ல. சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வாதி, சார்பதிவாளர் மற்றவர் மீது நான் வழக்கு தொடர்ந்துள்ளேன். வாதி பொதுக்குடும்ப சொத்தை செட்டில்மெண்ட் செய்யக்கூடாது என்று ஆட்சேபனை செய்ததால் சார்பதிவாளர் உங்கள் செட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவு செய்யாததால் அது தொடர்பாக நீங்கள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை சார்பதிவாளர் பதிவு செய்ய மறுக்கப்பட்ட ஆவணத்தில் வீடு பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றும் அடிமனையை பற்றி மட்டும் தான் குறிப்புள்ளது என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. தற்போது செய்த செட்டில்மெண்ட் ஆவ ணத்தில் வீடு உட்பட அனைத்தும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வீடு வாதி தான் கட்டினார் என்றால் சரியல்ல என் தகப்பனார் கட்டினார். வாதிக்கு பங்கு கிடைக்கக்கூடாது என்று போலியாக ஆவணம் தயார் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.10 17:30:30 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.